**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8069839

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : DVAC மாவட்டம் | PS: HQRS காவல்நிலையம் | Year: 2020 ஆண்டு | FIR No.: 10 மு.த.அ. எண் | Date: 17.10.2020 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption | Sections பிரிவுகள்: 7 & 12
   (ii) Act சட்டம்: Amendment Act 2018 | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : 16.10.2020 நாள் முதல் | Date to : 16.10.2020 நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : 15.50 நேரம் முதல் | Time to : 22.30 hrs. நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.10.2020 | Time நேரம் : 23.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 17.10.2020 | Time நேரம் : 03.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 11.2 km South.
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி Sub. Registrar office, No:35, Kamarajar Salai, Thiruneermalai Road, Pammal, Chennai
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Kotteeswaran | (b) Father's/ ~~Husband~~'s Name தந்தை / கணவர் பெயர் Tr. K.N. Subramanian (Late)
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் Deputy Inspection Cell Officer. | (g) Address : முகவரி Collectorate, Kancheepuram, Kancheepuram District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. Tr. B. Dinesh A1 45 S/o N. Bhuvanagan (Late), Sub. Registrar O/o Sub. Registrar, Pammal.
   2. Tr. R.P. Varaprasath A/33 S/o Rivenugopal, Assistant, O/o Sub. Registrar, Pammal.
   3. Tr. T. Ramamurthy A/59, S/o V. Thirumalai (Late), Office Assistant, O/o Sub Registrar, Pammal.
   4. Tr. V. Karthick A/38, S/o S. Velaiya, Private individual, No 35, Perumal koil st, Saidapet, Chennai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   No Delay.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Unaccounted cash of Rs 13780/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR contents is placed in a separate sheet.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 17/10/2020.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
17.10.2020.

Name: பெயர் J. Cherry
Rank: நிலை Inspector of police. No. எண்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

<u>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.10/2020 பிரிவு 7 & 12 ஊழல் தடுப்புச் (திருத்தம்) சட்டம் 2018 மற்றும் வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12-ன் தொடர்ச்சி பின்வருமாறு.</u>

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு (1) ஆய்வாளர் ஜோ.கிறிஸ்டி, ஆகிய நான் 17.10.2020 அன்று காலை 03.00 மணியளவில் திரு.சு.கோட்டிஸ்வரன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம், என்பவரிடமிருந்து பெற்ற புகார் மனுவினை திரு.வா.பாஸ்கரன், துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வுக் குழு-1 சென்னை அவர்கள் மனுவை பரிசீலனை செய்து அம்மனுவில் வழக்கு பதிவு செய்து மேல் விசாரணை செய்ய உத்தரவு வழங்கியதன் மூலம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.10/2020 பிரிவு 7 & 12 ஊழல் தடுப்புச் (திருத்தப்பட்டது) சட்டம் 2018 வழக்கு பதிவு செய்யப்பட்டு மேல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுவின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் திரு.சு.கோட்டிஸ்வரன், மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள், இருப்பிடம். காஞ்சிபுரம், பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வு பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16. கடித எண்.அ/272/ 2020 நாள் - 16.10.2020, அய்யா, பொருள், இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை-70, பம்மல், காமராஜபுரம், திருநீர் மலை சாலை என்ற இடத்தில் இயங்கி வரும் பம்மல் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை நாள் 16.10.2020 - ஆய்வுக் குறிப்பு மற்றும் இதர ஆவணங்கள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.13780/- மேல்நடவடிக்கைக்காக அனுப்புதல் - தொடர்பாக.

திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களின் மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர் மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை இன்று 16.10.2020-ம் தேதி சென்னை-70, பம்மல், காமராஜபுரம், திருநீர் மலை சாலை என்ற இடத்தில் இயங்கி வரும் பம்மல் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இரு துறை திடீர் கூட்டுத் தணிக்கையின் போது கணக்கில் வராத பணம் ரூ.13,780/- கைப்பற்றப்பட்டது. கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்டத் தொகை ரூ.13,780/- மற்றும் பின்வரும் ஆவணங்கள் ஆகியவை உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது. ஆவணங்களின் விவரங்கள்: 1. Statement of Tr.B.Dinesh A/45, S/o.(Late)N.Bhuvaragan, Sub Registrar, O/o Sub Registrar of Pammal, No.35, Kamarajar Salai, Thiruneermalai Road, Pammal, Chennai residing at:- Plot No.4B, Lakshmipuram Extension, West Tambaram, Chennai-45 was recorded on 16.10.2020. (Cell No.9840443703) 2. Statement of Tr.M.Jaffar A/39, S/o.(Late)G.Masthan, Assistant, O/o Sub Registrar of Pammal, No.35, Kamarajar Salai, Thiruneermalai Road, Pammal, Chennai residing at:- No.9A, 3rd Street, EB Colony, Adambakkam, Chennai was recorded on 16.10.2020. (Cell No.9710854564) 3. Statement of Tr.R.P.Varaprasath A/33, S/o.R.Venugopal, Assistant, O/o Sub Registrar of Pammal, No.35, Kamarajar Salai, Thiruneermalai Road, Pammal, Chennai residing at:- No.38/164, Supparaja Mesthri Street, Thiruthani, Thiruvallur District was recorded on 16.10.2020. (Cell No.9791819199) 4. Statement of Tr.R.Ranjith A/30, S/o.(Late).S.Ravindran, Assistant, O/o Sub Registrar of Pammal, No.35, Kamarajar Salai, Thiruneermalai Road, Pammal, Chennai residing at:- No.38/36, 3rd Main Rad, Jawahar Nagar, Peravallur, Chennai-82 was recorded on 16.10.2020. (Cell No.9884411428) 5. Statement of Tr.T.Ramamurthy A/59, S/o.Late.V.Thirumalai,

Office Assistant, O/o Sub Registrar of Pammal, No.35, Kamarajar Salai, Thiruneermalai Road, Pammal, Chennai residing at:- No.59/2, Manickam Vinayagam Street, Vyasarpadi, Chennai-39 was recorded on 16.10.2020. (Cell No.9444675151) 6. Statement of Tmt.C.Umamaheswari A/46, W/o.K.Babu, Data Entry Operator, O/o Sub Registrar of Pammal, No.35, Kamarajar Salai, Thiruneermalai Road, Pammal, Chennai residing at:- No.22, Vinoba Nagar, Anagaputhur, Chennai-70 was recorded on 16.10.2020. (Cell No.9789990867) 7. Statement of Tr.S.Murugan A/35, S/o.R.Selvaraj, Data Entry Operator, O/o Sub Registrar of Pammal, No.35, Kamarajar Salai, Thiruneermalai Road, Pammal, Chennai now residing at:- No.62, Annai Therasa Street, East Tambaram, near Cosh Hospital, Chennai-59, Permanent Address No.143, Kamarajar Street, Keelaiyur, Tirukovilur, Kallakurichi was recorded on 16.10.2020. (Cell No.8838271897) 8. Statement of Tr.M.Loganathan A/37, S/o.V.Murugesan, Data Entry Opreator, O/o Sub Registrar of Pammal, No.35, Kamarajar Salai, Thiruneermalai Road, Pammal, Chennai residing at:- No.6, Kennady Nagar 1st Street, Ankaputhur, Chennai-70 was recorded on 16.10.2020. (Cell No.8681838094) 9. Tr.S.Yuvaraj A/36, S/o.Sundaram, Camera Operator, O/o Sub Registrar of Pammal, No.35, Kamarajar Salai, Thiruneermalai Road, Pammal, Chennai residing at:- No.45/60, Thulukkanathamman Koil Street, Bharathi Nagar, Zamin Pallavaram, Chennai-43 was recorded on 16.10.2020. (Cell No.9042209118) 10. Statement of Tr.S.Chelladurai A/61, S/o.S.Solomon, Junior Assistant Retd, No.99B, Velachery Road, Guindy, Chennai-32 was recorded on 16.10.2020. (Cell No.9444475809) 11. Statement of Tr.V.Karthik A/38, S/o.S.Velaiya, Residing at:- No.38, Perumal Koil Street, Saidapet, Chennai-15 was recorded on 16.10.2020. (Cell No.98400 15796) 12. Statement of Tr.M. Ravi, Age-45, S/o.Muninathan, Residing at:- No.86/16, R Block, Kotturpuram, Chennai-15 was recorded on 16.10.2020. (Cell No.97103 76116) தங்கள் நம்பிக்கைக்குரிய மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர், திருவள்ளுர்,

காஞ்சிபுரம், மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள் இணைப்பு மேற்கண்டவாறு On 16.10.2020 at 23.30 hrs Inspector of Police, Tmt.J.Christy, is instructed to register a case & investigate, Sd//V.Baskar, Deputy Superintendent of Police, Received the letter on 16.10.2020 at 23.30 hrs and registered a case in V&AC, Head Quarters, Cr.No.10/2020 u/s 7 & 12 of The Prevention of Corruption (Amendment) Act 2018 Sd//J.Christy, Inspector/SIC-1, on 17.10.2020 காஞ்சிபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்புப் புலனாய்வுக் குழு-1 காவல் துணைக் கண்காணிப்பாளர் இணைந்து இன்று (16.10.2020) சென்னை-70, பம்மல், காமராஜபுரம், திருநீர் மலை சாலை என்ற இடத்தில் இயங்கி வரும் பம்மல் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இரு துறை கூட்டுத் தணிக்கையின் நடவடிக்கை. இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள் 1. திரு.சு.கோட்டீஸ்வரன், மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள், இருப்பு காஞ்சிபுரம். 2. திரு.வா.பாஸ்கரன், காவல் துணைக் கண்காணிப்பாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16, 3. திரு.சு.செந்தில்குமார், காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக் குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16, 4. திருமதி.ஜோ.கிறிஸ்டி, காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக் குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16, 5. திருமதி.எஸ்.ஜூடி அபிகெய்ல், காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக் குழு-2, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16, 6. திரு.பூ.தினேஷ், சார் பதிவாளர், பம்மல் சார் பதிவகம், சென்னை-70. சென்னை-70, பம்மல், காமராஜபுரம், திருநீர் மலை சாலை என்ற இடத்தில் இயங்கி வரும் பம்மல் சார் பதிவாளர் அலுவலகத்தில் அலுவலர்கள்

கையூட்டுப் பெறுவதாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வுப்பிரிவு-1 அலுவலகத்திற்கு நம்பகமான தகவல் கிடைத்ததையடுத்து காஞ்சிபுரம், திருவள்ளுர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களின் ஆய்வுக்குழு துணை ஆய்வுக் குழும அலுவலர் திரு.சு.கோட்டிஸ்வரன் அவர்களுக்கும் உயரதிகாரிகளுக்கும் தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவலின் அடிப்படையில் மேற்படி துணைக் காவல் கண்காணிப்பாளர் தனது அணியினருடனும் தகவல் தெரிவிக்கப்பட்டு வந்த துணை ஆய்வுக் குழும அலுவலரும் மேற்படி அலுவலகத்தில் இருந்து சுமார் 3.00 மணிக்கு புறப்பட்டு பம்மல் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 3.50 மணியளவில் ஆய்வு மேற்கொள்வதற்காக வந்து சேர்ந்தோம். அப்போது மேற்படி பம்மல் அலுவலகத்தில் சார் பதிவாளர் திரு.பூ.தினேஷ் அவர்கள் மேற்கு திசை நோக்கி தனது இருக்கையில் அமர்ந்திருந்தார். அவரிடம் ஆய்வுக்குழு துணை ஆய்வுக் குழும அலுவலர் திரு.சு.கோட்டிஸ்வரன் மற்றும் காவல் குழுவினர் அறிமுகம் செய்துகொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது அலுவலகத்தில் மேலும் உதவியாளர்கள் திரு.ம.ஜாபர் சாதிக், திரு.ஆர்.பி.வரப்பிரசாத், தியாகராய நகர் சார் பதிவகத்திலிருந்து பம்மல் சார் பதிவகத்தில் மாற்றுப் பணியில் பணி புரிந்து வரும் திரு.ஆர்.ரஞ்சித் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.ட்டி.இராமமூர்த்தி ஆகியோரும், தகவல் தொகுப்பு பணியாளர்கள் திருமதி.சி.உமா மகேஸ்வரி, திரு.எஸ்.முருகன், திரு.எம்.லோகநாதன், I.P. கேமரா ஆப்பரேட்டர் திரு.எஸ்.யுவராஜ் மற்றும் இவ்வலுவலகத்தில் அங்கீகரிக்கப்படாமல் பணியாற்றி வரும் திரு.ச.சாலமன் என்பவரின் மகனான திரு.சா.செல்லதுரை ஆகியோர் பணியில் இருந்தனர். மேலும் இவ்வலுவலக உதவியாளரான திரு.சுந்தரமூர்த்தி என்பவர் வேறு பணியாக பம்மல் சார் பதிவகத்தில்

பணி புரிந்து வருவதாக வருகைப் பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ளது. தகவல் தொகுப்பு பணியாளர்கள் திருமதி.சி.உமா மகேஸ்வரி, திரு.எஸ்.முருகன், திரு.எம்.லோகநாதன் மற்றும் I.P. கேமரா ஆப்பரேட்டர் திரு.எஸ்.யுவராஜ் ஆகிய மேற்படி நால்வரும் வருகைப் பதிவேட்டில் பதிவு செய்வதில்லை என்றும், அவர்கள் மாதந்தோறும் மாதாந்திர வருகை அறிக்கையில் அவர்கள் தனித்தனியான தாள்களில் பம்மல் சார் பதிவாளரிடம் கையொப்பம் பெற்று, எல்காட் அலுவலகத்திற்கு மாத ஊதியத்திற்காக அனுப்புவதாக கூறியதன் பேரில், அவ்வாறு செப்டம்பர் 2020 மாதத்திற்காக அனுப்பப்பட்ட வருகை அறிக்கையின் ஜெராக்ஸ் நகல்களின் உண்மை நகல்கள் - 4 தாள்களும் மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர் முன்னிலையில் விசாரணைக்காக பெற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் பம்மல் சார் பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் 2020ஆம் ஆண்டின் அக்டோபர் மாதத்திற்கான வருகைப் பதிவேட்டின் ஜெராக்ஸ் நகல், 02.01.2018 முதல் பராமரிக்கப்பட்டு வரும் இயக்கப் பதிவேட்டின் 19.12.2019 முதல் 14.10.2020 வரையிலான காலகட்டத்திற்கு பதிவு மேற்கொண்டுள்ள பக்கத்தின் ஜெராக்ஸ் நகல் மற்றும் 01.01.2020 முதல் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் பண இருப்புப் பதிவேட்டின் 16.10.2020 அன்று பதியப்பட்ட பக்கத்தின் ஜெராக்ஸ் நகல் ஆகியவை துணை ஆய்வுக் குழும அலுவலர் முன்னிலையில் விசாரணைக்காக பெற்றுக் கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் கணினி அறையில் இருந்த திரு.சா.செல்லதுரை என்பவரை விசாரித்த போது தான் இதே அலுவலகத்தில் 31.12.2016 அன்று இளநிலை உதவியாளராக பணியாற்றி ஓய்வு பெற்று, தற்போது எண்.99பி/16, வேளச்சேரி சாலை, கிண்டி, சென்னை-32 என்ற விலாசத்தில் குடியிருந்து வசித்து வருவதாகவும், கடந்த இரண்டு வருடங்களாக தினக்கூலி அடிப்படையில் தினமும் ரூ.500/- வீதம் சார் பதிவாளரிடம் பெற்றுக்

கொண்டு பம்மல் சார் பதிவாளர் அலுவலகத்தில் அங்கீரிகக்கப்படாமல் பணி புரிந்து வருவதாக தெரிவித்தார். சார் பதிவாளர் திரு.பூ.தினேஷ் அவர்களை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.1,400/- (Rs.500/- x 2 Nos. and Rs.200/- x 2 Nos.) இருப்பு காணப்பட்டது. இந்தத் தொகை குறித்து திரு.பூ.தினேஷ் அவர்களிடம் விசாரிக்க, அவரால் சரியான பதில் அளிக்க முடியாததாலும், தகுந்த முகாந்திரம் கூறாததாலும் தனி நபர் பண இருப்புப் பதிவேட்டில் பதிவு மேற்கொள்ளாததாலும் மேற்படி ரூ.1,400/- தொகை மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. திரு.செல்லதுரை என்பவரை ஆய்வு செய்த போது அவரிடம் ரூ.300/- கையிருப்பு இருந்தது. அவரை விசாரித்த போது தன்னுடைய சொந்த பணம் என்றும், கைச்செலவிற்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், மேற்படி ரூ.300/- தொகை திரும்பவும் திரு.செல்லதுரை அவர்களிடம் துணை ஆய்வுக் குழும அலுவலர் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டது. இவ்வலுவலகத்தில் இருந்த அலுவலர்களையும், அவர்களின் இருக்கைகள் மற்றும் அலுவலகத்தின் இதர பகுதிகளை சோதனையிடப்பட்டது. திரு.R.P.வரப்பிரசாத், உதவியாளரை சோதனையிட்ட போது, அவருடைய மேஜையின் இடது பக்கத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேடுகளுக்கு இடையில் ரூ.5,200/- (Rs.500/- x 9 Nos., Rs.100/- x 6 Nos. and Rs.50/- x 2 Nos.)காணப்பட்டது. இந்தத் தொகை குறித்து திரு.வரப்பிரசாத் அவர்களிடம் விசாரிக்க, அவரால் சரியான பதில் அளிக்க முடியாததாலும், தகுந்த முகாந்திரம் கூறாததாலும் மேற்படி ரூ.5,200/- தொகை மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. அவருக்கு பக்கத்து இருக்கையில் இருக்கும் தகவல் தொகுப்பு பணியாளர் திரு.எம்.லோகநாதன் என்பவரை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.1,470/- (Rs.500/- x 2 Nos., Rs.100/- x 4 Nos., Rs.20/- x 3 Nos. and

Rs.10/- x 1 No.) இருப்பு காணப்பட்டது. இந்தத் தொகை குறித்து திரு.லோகநாதன் அவர்களிடம் விசாரிக்க, அவரால் சரியான பதில் அளிக்க முடியாததாலும், தகுந்த முகாந்திரம் கூறாததாலும் தனி நபர் பண இருப்புப் பதிவேட்டில் பதிவு மேற்கொள்ளாததாலும் மேற்படி ரூ.1,470/- தொகை மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. உதவியாளர் திரு.ஜாபர்சாதிக் என்பவரை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.420/- இருப்பு காணப்பட்டது. அது குறித்து அவரிடம் விசாரிக்க, தான் அலுவலகத்திற்கு வரும்போது ரூ.500/- கொண்டு வந்ததாகவும், ரூ.80/- இன்று செலவு செய்து விட்டு, தற்போது ரூ.420/- வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் பண இருப்புப் பதிவேட்டில் திரு.ஜாபர்சாதிக் தான் அலுவலகத்திற்கு வரும் போது ரூ.500/- கொண்டு வந்ததாக பதிவு செய்திருப்பதன் அடிப்படையில், அவரிடம் மேற்படி ரூ.420/- தொகை மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர் முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இளநிலை உதவியாளர் திரு.ரஞ்சித் என்பவரை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.4,000/- இருப்பு காணப்பட்டது. அது குறித்து அவரிடம் விசாரிக்க, தான் அலுவலகத்திற்கு வரும்போது ரூ.5,200/- கொண்டு வந்ததாகவும், ரூ.1,200/- இன்று செலவு செய்து விட்டு, தற்போது ரூ.4,000/- வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் பண இருப்புப் பதிவேட்டில் திரு.ரஞ்சித் தான் அலுவலகத்திற்கு வரும் போது ரூ.5,200/ - கொண்டு வந்ததாக பதிவு செய்திருப்பதன் அடிப்படையில், அவரிடம் மேற்படி ரூ.4,000/- தொகை மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர் முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலக உதவியாளர் திரு.ராமமூர்த்தி என்பவரை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.5,220/- கையிருப்பு காணப்பட்டது.

அலுவலகத்தின் தனி நபர் பண இருப்புப் பதிவேட்டில் ரூ.1,000/- அவர் காலையில் கொண்டு வந்ததாக பதிவு மேற்கொள்ளப்பட்ட நிலையில், மீதமுள்ள ரூ.4,220/- (Rs.500/- x 6 Nos., Rs.200/- x 6 Nos. and Rs.10/- x 2 Nos.) குறித்து திரு.ராமமூர்த்தி அவர்களிடம் விசாரித்த போது, சரியான பதில் அளிக்காததாலும், தகுந்த முகாந்திரம் கூறாததாலும், மேற்படி ரூ.4,220/- தொகையை மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. கணினி அறையில் பணியாற்றிக் கொண்டிருந்த மேலும் மூன்று அலுவலர்களை சோதனையிடப்பட்டது. அவர்களில் தகவல் தொகுப்புப் பணியாளர் திருமதி.சி.உமா மகேஸ்வரி என்பவர் இருக்கையிலுள்ள கைப்பையை சோதனையிட்ட போது, அதில் ரூ.500/- தொகை காணப்பட்டது. மேற்படி திருமதி.உமா மகேஸ்வரி அவர்கள் இன்று பணிக்கு வரும்போது தனி நபர் பண இருப்புப் பதிவேட்டில் ரூ.500/- கொண்டு வந்ததாக பதிவு மேற்கொண்டிருந்ததன் அடிப்படையில், ரூ.500/- தொகை அவரிடமே மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர் முன்னிலையில் அளிக்கப்பட்டது. தகவல் தொகுப்பு பணியாளரான திரு.எஸ்.முருகன் என்பவரை சோதனையிட்ட போது அவரிடம் ரூ.900/- கையிருப்பு காணப்பட்டது. மேற்படி திரு.முருகன் அவர்கள் இன்று பணிக்கு வரும்போது தனி நபர் பண இருப்புப் பதிவேட்டில் ரூ.500/- கொண்டு வந்ததாக பதிவு மேற்கொண்டிருந்ததால், மீதமுள்ள ரூ.400/- (Rs.200/- x 1 No. and Rs.100/- x 2 Nos.) குறித்து அவரிடம் விசாரிக்க, அவரால் தகுந்த முகாந்திரம் அளிக்க முடியாததால், மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர் முன்னிலையில் அவரிடமிருந்து ரூ.400/- கைப்பற்றப்பட்டும், திரு.முருகன் அவர்களிடம் ரூ.500/- தொகை திரும்ப வழங்கப்பட்டது. I.P. கேமரா ஆப்பரேட்டரான திரு.எஸ்.யுவராஜ் என்பவரை சோதனையிட்ட போது, அவரிடம் கையிருப்பில் இருந்த ரூ.1,090/- (Rs.500/- x 1 No.,

Rs.200/- x 1 No., Rs.100/- x 3 Nos., Rs.50/- x 1 No. and Rs.10/- x 4 Nos.) தொகை குறித்துக் கேட்க, அவரால் தகுந்த முகாந்திரம் அளிக்க முடியாததால், மேற்படி ரூ.1,090/- தொகை திரு.யுவராஜிடமிருந்து மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. இன்று 16.10.2020ல் கணினியில் பதியப்பட்டுள்ள விவரங்களை பிரிண்ட் அவுட் எடுத்து பார்வையிட்டதில் 58 ஆவணங்கள் பதியப்பட்டுள்ளதாகவும், அவற்றின் மூலம் முத்திரைத் தீர்வையாக இ-பேமெண்ட் ரூ.20,05,726/-, பதிவுக் கட்டணமாக இ-பேமெண்ட் ரூ.15,34,985/- மற்றும் POS மெஷின் மூலம் பதிவுக் கட்டணமாக ரூ.1,950/- தொகையும் அரசுக்கு வருவாய் வந்துள்ளதாக பதிவு காணப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் சந்தேகத்திற்கிடமான விதத்தில் நின்று கொண்டிருந்த திரு.வி.கார்த்திக், வயது 38/2020, த/பெ.எஸ்.வேலைய்யா, எண்.38, பெருமாள் கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15 என்பவரை விசாரித்து அவரிடமிருந்த நோக்கியா செல்போனில் இருந்த வாட்ஸ்ஆப் தகவல் பரிமாற்றங்களை ஆய்வு செய்த போது, பம்மல் சார் பதிவாளர் திரு.தினேஷ் அவர்களின் செல்போனின் வாட்ஸ்ஆப் எண்ணிற்கு போட்டோக்கள் அனுப்பியதை குறித்து திரு.கார்த்திக்கிடம் விசாரித்த போது, சார் பதிவாளர் திரு.தினேஷ் அவர்கள் அவ்வப்போது பணம் கொடுத்து, அவர் கூறும் நபர்களின் வங்கிக் கணக்குகளுக்கு அத்தொகைகளை அனுப்பும்படி சொல்லும்போது, அந்தந்த வங்கிகளின் ATM மையத்திற்கு சென்று CDM மிஷின் மூலம் அந்தந்த வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி விட்டு, அதற்கான ஸ்லிப் பிரிண்ட் ஆகி வரும் போது, அதை போட்டோ எடுத்து, அதை சார் பதிவாளர் தினேஷ் அவர்களின் வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வந்ததாக தெரிவித்தார். அவ்வாறு அனுப்பப்பட்ட செய்திகளில் D.பத்மாவதி என்பவர் இந்தியன் வங்கி, கூடுவாஞ்சேரி கிளை கணக்கு எண்.948708108 பாஸ் புத்தகத்தின்

முதல் பக்க போட்டோ, பாரத ஸ்டேட் வங்கி CDM இயந்திரத்தில் 17.09.2020 அன்று எண்.XXXXXXXX5335 என்ற கணக்கிற்கு 19.46 மணிக்கு ரூ.44,500/- மற்றும் 19.48 மணிக்கு ரூ.5,500/- ஆகிய தொகைகள் டெபாசிட் செய்யப்பட்டதற்கான பிரிண்ட் அவுட் போட்டோ, இந்தியன் வங்கி CDM இயந்திரத்தில் 17.09.2020 அன்று 20.53 மணிக்கு கணக்கு எண்.0000000040342820 என்ற கணக்கிற்கு ரூ.45,000/- டெபாசிட், இந்தியன் வங்கி CDM இயந்திரத்தில் 17.09.2020 அன்று எண்.0000000604932424 என்ற கணக்கிற்கு 20.57 மணிக்கு ரூ.19,500/- மற்றும் 21.00 மணிக்கு ரூ.500/- ஆகிய தொகைகள் டெபாசிட், இந்தியன் வங்கி CDM இயந்திரத்தில் 24.09.2020 அன்று 19.29 மணிக்கு எண்.0000000604932424 என்ற கணக்கிற்கு ரூ.19,000/- டெபாசிட், இந்தியன் வங்கி CDM இயந்திரத்தில் 03.10.2020 அன்று 12.58 மணிக்கு எண்.0000000094870810 என்ற கணக்கிற்கு ரூ.5,000/- டெபாசிட், இந்தியன் வங்கி CDM இயந்திரத்தில் 05.10.2020 அன்று எண்.0000000604932424 என்ற கணக்கிற்கு ரூ.10,000/- டெபாசிட், இந்தியன் வங்கி CDM இயந்திரத்தில் எண்.0000000040342820 என்ற கணக்கிற்கு 07.10.2020 அன்று 19.51 மணிக்கு ரூ.47,000/- மற்றும் 19.53 மணிக்கு ரூ.3,000/- ஆகிய தொகைகள் டெபாசிட், இந்தியன் வங்கி CDM இயந்திரத்தில் 13.10.2020 அன்று 14.37 மணிக்கு எண்.0000000094870810 என்ற கணக்கிற்கு ரூ.5,000/- டெபாசிட் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணப்பரிவர்த்தனைகளுக்கும் CDM இயந்திரத்திலிருந்து கிடைக்கப் பெற்ற டெபாசிட் ரசீதுகளும் அடங்கும். மேற்படி சார் பதிவாளர் திரு.பூ.தினேஷ் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்டத் தொகை ரூ.1,400/-, திரு.வரப்பிரசாத் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்டத் தொகை ரூ.5,200/-, திரு.ராமமூர்த்தி என்பவரிடமிருந்து ரூ.4,220/- திரு.எம்.லோகநாதன் என்பவரிடமிருந்து ரூ.1,470/-, திரு.எஸ்.யுவராஜ் என்பவரிடமிருந்து ரூ.1,090/- மற்றும் திரு.எஸ்.முருகன்

என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்டத் தொகை ரூ.400/- ஆக மொத்தம் ரூ.13,780/- (Rs.500/- x 20 Nos., Rs.200/- x 10 Nos., Rs.100/- x 15 Nos., Rs.50/- x 3 Nos., Rs.20/- x 3 Nos. and Rs.10/- x 7 Nos.) தொகை வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது குறித்து சார் பதிவாளர் திரு.தினேஷ் அவர்களை விசாரித்த போது, தன்னிடம் பண உதவி கேட்கும் நபர்களுக்கு தன்னிடம் உள்ள பணத்தை, கார்த்திக்கிடம் கொடுத்து வங்கி CDM இயந்திரத்தின் மூலம் அவரவர் வங்கிக் கணக்கிற்கு டெபாசிட் செய்ததாக கூறினார். இத்தொகையை தான் சம்பளம் பெறும் வங்கிக் கணக்கின் மூலம் வங்கிப் பணப் பரிமாற்றம் செய்யவில்லை என்று கூறினார். இந்த இருதுறை தணிக்கையின் போது சார் பதிவாளர் திரு.பூ.தினேஷ், உதவியாளர்கள் திரு.ம.ஜாஃபர் சாதிக், திரு.ஆர்.ப்பி.வரப்பிரசாத், திரு.ஆர்.ரஞ்ஜித், அலுவலக உதவியாளர் திரு.இராமமூர்த்தி, தகவல் தொகுப்பு பணியாளர்கள் திருமதி.சி.உமா மகேஸ்வரி, திரு.எஸ்.முருகன், திரு.எம்.லோகநாதன் மற்றும் I.P. கேமரா ஆப்பரேட்டர் திரு.எஸ்.யுவராஜ், பதிவுத் துறையிலிருந்து ஓய்வு பெற்று விட்டு அங்கீகரிக்கப்படாமல் பம்மல் சார் பதிவகத்தில் பணி புரிந்து வந்த திரு.செல்லதுரை, தனி நபரான திரு.வி.கார்த்திக் ஆகியோரின் வாக்குமூலங்கள் மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலரின் முன்னிலையில் பதியப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் தணிக்கை இன்று (16.10.2020) இரவு 10.30 மணிக்கு முடிக்கப்பட்டது. sd/xx சு.கோட்டீஸ்வரன்) மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள், இருப்பு காஞ்சிபுரம். sd/xx (வா.பாஸ்கரன்) காவல் துணைக் கண்காணிப்பாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. sd/xx (சு.செந்தில்குமார்) காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக் குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.

sd/xx (ஜோ.கிறிஸ்டி) காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக் குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. sd/xx (எஸ்.ஜூடி அபிகெய்ல்) காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக் குழு-2, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. sd/xx (பூ.தினேஷ்) சார் பதிவாளர், பம்மல் சார் பதிவகம், சென்னை-70.

Hon'ble Madam,

The above complaint was registered in V&AC, Headquarters in Cr.No.10/2020/AC/HQ u/s 7 & 12 of Prevention of Corruption (Amendment) Act 2018 on 17.10.2020 at 03.00 hrs (sd/xxxx Inspector of Police, SIC-1, V&AC, Chennai-16. The original FIR along with complaint enclosed with Joint Surprise Check Proceeding was submitted before the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chengalpattu.

17/10/2020

(J.கிறிஸ்டி)
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வுக் குழு-1,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை,
சென்னை-16.